VNR9T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

## வகுப்பு 9

காலம்: 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 15×1=15

1) காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை

ஆ) இயைபு அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு

ஈ) மோனை, முரண், அந்தாதி

2) 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

3) பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை

இ) யசோதர காவியம் ஈ) சீவகசிந்தாமணி

4) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ............

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

5) தீரா இடும்பைத் தருவது எது?

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

6) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு

ஈ) மூன்றும் சரி

7) ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

8) 'சனி நீராடு' என்பது யாருடைய வாக்கு?

அ) திருவள்ளுவர் ஆ) பேரா.தொ. பரமசிவன்

இ) ஔவையார் ஈ) ஜான் பென்னி குவிக்

9) இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொகை

10) உடம்படுமெய் என்பவை ............

அ) க் ங் ஆ) ய் வ் இ) ய் ர் ஈ) வ் ல்

11) ஆகுபெயரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) தமிழரசி வள்ளுவரைப் படித்தாள்.

ஆ) நாடும் வீடும் நமது இரு கண்கள்.

இ) கலைச்செல்வி பச்சைநிற ஆடையை உடுத்தினாள்.

ஈ) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.

**பாடலைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக:**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) சீவக சிந்தாமணி ஆ) பெரியபுராணம்
இ) முத்தொள்ளாயிரம் ஈ) மணிமேகலை

13) மேற்கண்ட பாடலில் ............ நாட்டின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.
அ) பாண்டிய நாடு ஆ) சோழ நாடு இ) ஏமாங்கத நாடு ஈ) சேர நாடு

14) இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை எது?
அ) அள்ளல் - வெள்ளம் ஆ) வெள்ளம் - புள்ளினம்
இ) அள்ளல் - அரக்காம்பல் ஈ) கைச்சிறகு - கவ்வை

15) 'அள்ளல்' என்பதன் பொருள் ............
அ) குஞ்சு ஆ) வயல் இ) சேறு ஈ) பழனம்

## பகுதி - II

**அ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** **4×2=8**
**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினா அமைக்க:**
அ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்று கூறுகிறது புறநானூறு.
ஆ) பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார்.

17) கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

18) ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

19) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

20) 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

21) 'தரும்' என முடியும் திருக்குறள்.

**ஆ) எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** **5×2=10**

22) வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23) **அகராதியில் காண்க:**
அ) செம்மல் ஆ) ஈகை

24) **கலைச்சொல் தருக:**
அ) Commodity exchange ஆ) Missile

25) **விடையைத் தமிழ் எண்களில் எழுதுக:**
அ) ஆழ்வார்கள் மொத்தம் ............
ஆ) ஆகுபெயர் ............ வகைப்படும்.

26) **பிழை நீக்கி எழுதுக:**
சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

27) **மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க:**
அ) எட்டாக்கனி ஆ) ஆகாயத் தாமரை

28) **வினையடியை முதல் வினையாகவும் துணை வினையாகவும் அமைத்துத் தொடர்களை உருவாக்குக:**
விடு

## பகுதி - III

அ) ***சிறு வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி)*** **2×3=6**

29) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

30) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

31) **பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ் பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இவர்களில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி இராஜாமணி முதலானோர் விளங்கினர்.

நேதாஜி அமைத்த தற்காலிக அரசின் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த வீரர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவின் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

**விடையளி:**

அ) இந்திய தேசிய இராணுவத்தில் யாருடைய பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது?

ஆ) இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படையில் தலைசிறந்த தலைவர்களாக விளங்கியவர் யாவர்?

இ) சுதந்திர இந்தியாவின் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர் யார்?

ஆ) ***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:*** **2×3=6**
***(34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளி)***

32) ''மாகால் எடுத்த முந்நீர்போல'' - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

33) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

34) **அடிபிறழாமல் எழுதுக:**

சொல்அரும் எனத் தொடங்கும் சீவகசிந்தாமணி மனப்பாடப் பாடல்.

**(அல்லது)**

'அறிவியல் என்னும்' எனத் தொடங்கும் ஓ என் சமகாலத் தோழர்களே மனப்பாடப் பாடல்.

இ) ***சிறுவினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி)*** **2×3=6**

35) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

36) பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் - விளக்குக.

37) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - IV

அ) ***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:*** **5×5=25**


38) அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

39) அ) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்? **(அல்லது)**

ஆ) இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



41) நயம் பாராட்டுக:

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இரங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

- கவிமணி

42) அ) மொழிபெயர்க்க:

Hifting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, higher the note will be. The more water in a bottle, the less is vibrates so less water means higher rates.

(அல்லது)

ஆ) சமூகத்திற்கு எனது பணிகள் என்று குறித்து 5 வரிகள் எழுதுக.

## பகுதி - V

விரிவான விடையளி: 3×8=24

43) அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44) அ) குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக:
பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும்குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.

(அல்லது)

ஆ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

45) அ) கட்டுரை வடிவில் விடை தருக:
இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

----------